



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் ஒன்றிய செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன் வரவேற்பில் மண்டையூரில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தஞ்சை காமராஜ் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் சே.ஆர்.என்.போஸ், தென்னலூர் எம்.பழனியப்பன், முனைவர் சி.குறிஞ்சிவாணன், விளாப்பட்டி சிவா, ம.செல்லத்துரை, எம்.பாண்டியன், எஸ்.டி.கண்ணன், ஒ.ஆறுமுகம், ஆதனப்பட்டி நாகராஜ் , ஆர்.நேரு, காந்தி(எ) முத்துச்சாமி, எஸ்.சுரேஷ், எம்.ரவிச்சந்திரன், கே.பூபதி, பொன்ராம், ராஜா ஸ்டாலின், எழில் ராஜா, மகேந்திரன், விஜயகாந்த், அருள், பாண்டியன், கார்த்திக், திருப்பதி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



மேற்கு மண்டல அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாஅமைப்பு சாரா ஓட்டுநர் அணி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா' என முப்பெரும் விழாவாக கோவை கருமத்தம்பட்டி கொங்கு கலையரங்கில் மாநில துணைச் செயலாளர், அரவக்குறிச்சி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பனப்பட்டி கே.தினகரன் தலைமையில் மாநில துணைச் செயளாலர் ஆர்.எம்.சி.விஷ்ணுபிரபு வரவேற்புரையில் மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாநில செயலாளர், கிருஷ்ணகிரி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் டி.செங்குட்டுவன், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் கருமத்தம்பட்டி நகர செயலாளர் நித்திய மனோகர் உள்பட மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட துணைத் தலைவர்கள் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில்

# வாடாதவூரில் 50-க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

காஞ்சிபுரம், மே 15 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில் "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு" நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் வாடாதவூர் கிராமத்தில் 11.5.2025 அன்று ஒன்றிய செயலாளர் டி. குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில் வாடாதவூர், பார்த்திபன் மணிகண்டன், தலைமையிலும் ரெட்ட மங்கலம் தீபா லட்சுமி, பானு ஸ்ரீ தலைமையிலும் 50க்கும் மேற்பட்ட இளைஞர்களும் மகளிர்களும் மாற்றுக் கட்சியில் இருந்து கழகத்தில் இணைந்தனர். அதுபோது தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை எஸ்.பாஸ்கர், சாலவாக்கம் ஒன்றிய நிர்வாகிகள் சிவராமன், வெங்கடேசன், கார்த்திகேயன், மணி, சஞ்சய்காந்த், கலை இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ். முரளிதரன், ரத்தின மாலா, சுஜாதா, ஒன்றிய பொருளாளர் பால முருகன், வெங்கடசுப்பிரமணி, நதியா கோபி, பாபு, வெஸ்லி, ஏழுமலை, பிரகாஷ், பழனி, சந்தோஷ் பாலாஜி, பாபு, விஷ்ணு, சேகர், ராஜேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோட்டூர் தெற்கு ஒன்றியம் பெருக வாழ்ந்தானில் கழக இளைஞர் அணியின் சார்பில் நீர் மோர் பந்தலை ஒன்றிய கழகச் செயலாளர் வி.எஸ்.ஆர்.தேவதாஸ் தலைமையில் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் திறந்து வைத்தார். இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் வினோத்குமார், ஒன்றிய அமைப்பாளர் பாலா மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# திராவிட மாடல் அரசின் 4ஆம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

### சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ - தலைமைக் கழக பேச்சாளர் செள.மாரிக்கண்ணன் சிறப்புரை!

தஞ்சாவூர், மே 15- தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய செயலாளர் சு.க. முத்துசெல்வம் தலைமை வகித்தார். சுவாமிமலை பேரூர் செயலாளர் எம்.எஸ்.எம். பாலசுப்பிரமணியன், ஒன்றிய நிர்வாகிகள் யு.எஸ்.ஆர்.லோகநாதன், சண்முகம், தங்க. தியாகராஜன், அனிதா செல்வராஜ், கரிகாலன், அன்பழகன், வைஜெயந்தி சிவக்குமார், செந்தில்குமார், விஜயகுமார், தேவஸ்ரீகண்டன் மற்றும் துரை.குணாளன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பிரதிநிதி மணிவாசகம் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தலைமை கழக பேச்சாளர்கள் செள.மாரிக்கண்ணன் மற்றும் வியானி விஷ்வா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட சார்பணி அமைப்பாளர்கள், பட்டீஸ்வரம் வார்டு செயலாளர்கள், ஊராட்சிமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பித்தனர். கூட்ட நிறைவாக ஒன்றிய பொருளாளர் இளங்கோ நன்றி கூறினார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் வெங்கடசமுத்திரம் ஊராட்சியில் பாப்பிரெட்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் சி.முத்துக்குமார் தலைமையில் நடைபெற்ற தமிழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் பி.பழனியப்பன், தலைமைக் கழக பேச்சாளர் ரேகா ப்ரியதர்ஷினி ஆகியோர் கழக ஆட்சியின் சாதனைகள் குறித்து பேசினர். கூட்டத்தில் மாநில நிர்வாகி சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவம்பட்டியில் தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கை!

செஞ்சி,மே 15- விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடல் உழைப்பு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் சிறப்பு முகாம் வல்லம் ஒன்றியம் திருவம்பட்டு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நல வாரிய உறுப்பினர் செஞ்சி சிவா தலைமை தாங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார். விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு திட்ட உதவி ஆணையர் ராஜசேகரன் அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து திருவம்பட்டு, கப்பை ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடல் உழைப்பு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரிய சிறப்பு முகாமில் உறுப்பினர் பதிவு செய்தல், உறுப்பினர் பதிவு புதுப்பித்தல், உதவித்தொகை, ஓய்வூதியம் ஆகிய திட்டங்களுக்கு ஏராளமானோர் கலந்து கொண்டு பதிவு செய்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் துரை, இளம்வழுதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதயகுமார், இளங்கோவன், மாவட்ட கவுன்சிலர் சசிகலா மோகனசுந்தரம், ஊராட்சி மன்ற தலைவர் முருகன், ஒன்றிய நிர்வாகி கள்கம்மந்தூர் கண்ணன், கொங்கரப்பட்டு கண்ணன், முருகன், திருவம்பட்டு கிளைக் கழக நிர்வாகிகள் நாராயணசாமி, ராஜேந்திரன், பன்னீர் ,தனுசு, சத்யராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.பாலு (எ) திராவிட பாலு
### மே 15 (2013)



இளமைக் காலம் முதற்கொண்டு திராவிட இயக்கத்தில் பற்று கொண்டு திருவள்ளூர் மாவட்டம், கன்னிகைப்பேர் கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், இருமுறை எல்லாபுரம் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், மூன்று முறை கன்னிகைப்பேர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்றுமாத காலம் சிறைவாசம் அனுபவித்தவர். மேலும் கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தோற்றம் 06.10.1939

மறைவு 14.05.1985

நாற்பதாம் ஆண்டு நினைவு நாள்



15.05.2025 (வைகாசி முதல் நாள்)

எங்கள் குடும்ப விளக்கு
சுயமரியாதைச்சுடர் பர்வதலெட்சுமி இராசன்

நீ இன்றி நான் இல்லை
உன்னை நினையாத பொழுதில்லை

அறந்தாங்கி இராசன்
தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு தலைவர்
சிவபர்வதம் இல்லம், சுப்பிரமணியபுரம் - 614 805
மற்றும்
பிள்ளைகள் - பேரப்பிள்ளைகள் - கொள்ளுப்பேரப்பிள்ளைகள்